# Year 1 எண் சோதனைச் சரிபார்ப்பு



## பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான தகவல்

## Year 1 எண் சோதனைச் சரிபார்ப்பு என்றால் என்ன?

Year 1 எண் சோதனைச் சரிபார்ப்பு (Year 1 Number Screening Check) என்பது மாநிலம் முழுவதும் நடத்தப்படும் ஒரு குறுகிய மதிப்பீடு ஆகும். இது உங்கள் குழந்தை ஆரம்ப எண் புரிதலில் எப்படி முன்னேறிக் கொண்டு இருக்கிறார் என்பதை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கிறது. இந்த சோதனைச் சரிபார்ப்பு, உங்கள் பிள்ளை எண்களை அடையாளம் காணுதல், எண்களை வரிசைப்படுத்துதல், எண்ணுதல், ஒப்பிடுதல், மேலும் கூட்டல் மற்றும் கழித்தல் செய்யுதல் போன்ற திறன்களை எப்படி செய்கிறார் என்பதை கண்காணிக்கிறது.

உங்கள் பிள்ளை ஆசிரியருக்கு அருகில் அமர்ந்து, அவர் கேட்கும் சுமார் 30 கேள்விகளுக்கு பதில் அளிக்கும்படி கேட்கப்படுவார். இந்த சோதனை சாதாரணமாக **10 முதல் 15** நிமிடங்கள் வரை நடைபெறும். Year 1 Number Screening Check உங்கள் பிள்ளைக்கு மன அழுத்தம் ஏற்படுத்தாத வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் பிள்ளை சிரமப்படுவாராயின் ஆசிரியர் சோதனையை நிறுத்திவிடுவார்.

உங்கள் பிள்ளையின் கற்றலைத் திட்டமிட அவர்களின் ஆசிரியருக்கு தேவையான தகவலை வழங்குவதே Year 1 Number Screening Check - இன் முதன்மை நோக்கமாகும். அனைத்து Year 1 மாணவர்களும் ஆசிரியரால் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படுவார்கள்.

Year 1 Number Screening Check குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் பாடசாலையை தொடர்பு கொள்ளவும்.

## எண் உணர்வு என்றால் என்ன?

எண் உணர்வு என்பது எண்களைப் பற்றி புரிந்து கொள்ளும் திறன், அவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தும் திறன், மேலும் அன்றாட வாழ்வில் பயனுள்ள வகையில் எண்களைக் கொண்டு செயல்படும் திறன் ஆகும். இதன் மூலம் பிள்ளைகள் உலகைப் புரிந்து கொள்ள முடியும். சில பிள்ளைகள் எண் உணர்வை சவாலாக உணரலாம், எனவே அவர்கள் விரைவில் அடையாளம் காணப்படுவது முக்கியம். இதன் மூலம், அவர்களுக்குத் தேவையாயிருக்கக்கூடிய எந்தவொரு சிறப்பு உதவிக்காகவும் ஆசிரியர்கள் முன்கூட்டியே திட்டமிட முடியும்.

## எண் உணர்வு ஏன் முக்கியம்?

எண் உணர்வில் ஒரு வலுவான அடித்தளம் இடப்படுவதன் மூலம், தொடக்கப் பாடசாலையின் இறுதி ஆண்டுகளிலும் மேல்நிலைப் பாடசலையிலும் உங்கள் பிள்ளை மேலும் சிக்கலான கணிதக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

## தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

நீங்கள் பாடசாலையைத் தொடர்பு கொள்ள உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற இலக்கத்தை அழைத்து உங்களுக்கு தேவைப்படும் மொழியை தொலைபேசி இயக்குனரிடம் கூறி, அவரை பாடசாலையை அழைக்குமாறு கேட்கவும். உங்கள் உரையாடலில் உதவுவதற்காக தொலைபேசி இயக்குனர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை இணைப்பில் ஏற்பாடு செய்வார். இந்த சேவைக்காக நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.